1970 ஏப்ரல் 8]

THIRU T. MARTIN : Mr. Speaker, in 1969 the Union Public Service Commission which came here to settle the I.A.S. quota for this State has not settled it. May I know from the Hon. the Chief Minister the reason for the same ? Further, with regard to certain Gazetted Officers, may I know whether some officers holding tenure posts were confirmed in those tenure posts, Sir ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1969 நவம்பர் மாதத்தில் வருவதாக தேர்வுக்குழு அறிவித்திருந்தது. அந்த நேரத்தில், நேரடியாக நியமனம் பெற்ற டெபுடி கலெக்டர்கள், தங்கள் ஸீனியாரிடி சரிவர அமைக்கப்படுவதற்கு முன்னால் தேர்வுக்குழு வந்தால், தங்களுக்கு அநீதி ஏற்படும் என்று கோரிக்கை விடுத்தார்கள். அந்தக் கோரிக்கையினுடைய நியாயத்தை அறிந்த அரசு, தேர்வுக் குழு வருவதை ஒத்திப்போடுமாறு கேட்டுக் கொண்டது.

திரு. கே. விநாயகம் : மற்ற இலாக்காக்களில் இருப்பவர்களுக்கு, இந்த ஐ.ஏ.எஸ். பெற என்ன வழி இருக்கிறது ? ரெவினியூ டிபார்ட்மென்டில் இருப்பவர்களுக்குத்தான் முதன் முதல் வாய்ப்புத் தரப் படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அதைத் தடுப்பதற்கு அரசு என்ன முயற்சி செய்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தடுப்பதற்கு அல்ல. ஏற்கனவே முழுவதுமே ரெவினியூ டிபார்ட்மென்டில் உள்ளவர்களுக்குத்தான் இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டு வந்தது. 1956-ஆம் ஆண்டில்தான் ரெவின்யூ டிபார்ட்மென்டில் உள்ளவர்களுக்கு 85 சதவீதம் என்றும், மற்ற டிபார்ட்மென்டில் உள்ளவர்களுக்கு 15 சதவீதம் என்றும் ஆக்கியிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 711, 712, 713, 714, 715, 716, 717 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

Special Employment Exchange for Physically handicapped.

* 718 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Special Employment Exchange for the physically handicapped has receievd applications for the post of District and Sessions Judges ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மாவட்ட செஷன்சு நீதிபதிப் பதவிக்கான ஒரே ஒரு விண்ணப்பம் மட்டுமே உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பகத்திடம் வந்தது. அது அரசுக்கு அனுப்பப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது மாதிரியான, உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் கீழ் நிலையில் இருக்கக் கூடிய பதவிகளுக்குத் தான் அது மாதிரி வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று சொல்லப் படுகிறது. அப்படியிருக்கிற உயர் பதவிக்கு அவர்கள் மனுப் போடும்போது, அவர்கள் மனுக்களை கவனிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாவட்ட நீதிபதி வேலையை மிக உயர்ந்த பதவி என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு டி. மார்ட்டின்: மாவட்ட நீதிபதிகள் நியமனத்தில் சர்வீசில் இருக்கக்கூடியவர்களுக்கு 18 என்றும், டைரக்ட் ரெக்ரூட் 6 என்றும் இருந்ததை மாற்ற அரசு நினைத்திருப்பதாகவும், அது கூடாது என்பதற்காக சப் ஜட்ஜ், முன்சீப் மகாநாடு திருச்சியில் நடந்ததாகக் கூறப்படுகிறதே, ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: முதலில் இருந்த விகிதாசாரத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்று உயர்நீதி மன்றம் சிபார்சு செய்தது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஏற்கனவே இது பற்றி முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையில் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

Employment Exchange at Erode.

*719 Q.—THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. Minister for Industries be pleased to state—

(a) whether an Employment Exchange has been opened in Erode; and

(b) if so, the employment potential in the area ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) வேலைவாய்ப்புத் துணை அலுவலகம் ஒன்று ஈரோடில் திறக்கப்பட்டுள்ளது. இது 19—11—1969 முதற்கொண்டு செயல்பட்டு வருகிறது.

(இ) 25 தொழிலாளர்களும் அதற்குமேலும் வேலைக்கு அமர்த்தும் 71 நிறுவனங்கள் ஈரோடு வட்டத்தில் உள்ளன. சுமார் 8,000 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் பஞ்சாலையும் இதில் அடங்கும். வெளுத்தல், சாயம்போடுதல், வண்ண அச்சிடுதல், ஆகிய பணிகளை இந்த வட்டத்தில் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளாகும். இதைத் தவிர தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற கைவினைஞர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு கொடுக்கும் கருவி அறைப்பட்டரை ஒன்றும் இருக்கிறது. ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் 2 கல்லூரிகளும இருக்கின்றன. ரயில்வே டீசல் என்ஜின் கொட்டகை ஒன்றும் கூட வேலைவாய்ப்பு அளிக்கிறது. தற்போது இந்த வட்டத்தில் வேலை வாய்ப்பு அதிகரிக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

அஞ்சல் படிவங்களில் தமிழ்.

* 720—வினா. திருமதி கே. பி. ஜானகியம்மாள்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கிடைக்கும் தபால் கார்டு, கவர், தந்தி பாரங்களில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம். அஞ்சல் படிவங்களைப் பொறுத்த வரையில் அவை இந்தி, ஆங்கிலம் வட்டார மொழி ஆகியவற்றில் அச்சிடப்படுகின்றன என்றும், நீளமான படிவங்களைப் பொறுத்த வரையில் இந்தி, ஆங்கிலம், வட்டார மொழி ஆகியவற்றில் அவை தனித்தனியாக அச்சிடப்படுகின்றன என்றும் இந்திய அரசு தெரிவித்துள்ளது. அஞ்சல் அட்டைகள், உள்நாட்டு அஞ்சல் தாள், அஞ்சல் உறைகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் எல்லா வட்டார மொழிகளிலும் அவற்றை அச்சிட்டு வெளியிடுவது கடினமென்றும் ஒவ்வொரு வட்டாரத்திற்கென தனித்தனியாக அச்சிடுவதனால் ஏராளமான செலவாகும் என்றும் பிற வட்டார மக்களுக்கு அது புரியாதென்பதும் அவர்களது கருத்தாகும்.